பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
09 01 2026 FRIDAY 6 30 PM
<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதில் மொழி முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- தூர்தர்ஷன் செய்தி அலைவரிசையில் ஒளிபரப்பாகும், பிரஸார் பாரதியின் படைப்பாளர்களுக்கான பிரத்யேக நிகழ்ச்சியை தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர் இன்று தொடங்கி வைத்தனர்.
- தமிழகத்தில் பத்து லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் திமுக அரசு, கடந்த நான்காண்டுகளில் ஆக்கபூர்வமான திட்டங்கள் எதையும் செயல்படுத்தவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.
- நாகை, திருவாரூர், ராமநாதபுரம் உள்ளிட்ட 17 மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதில் மொழி முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சர்வதேச இந்திய மொழிகள் மாநாட்டில் பேசிய அவர். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு அஸ்ஸாமி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

ஆயுர்வேத மருத்துவத்தில் மலையாள மொழியின் பங்களிப்புக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

பண்டைக்கால கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள் முதல் தற்கால டிஜிட்டல் திரை வரை, மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தில் மொழி முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

>>>>>><<<<<<

*ராணுவத் தளவாட உற்பத்தி ஆண்டுக்கு 15 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*உத்தரபிரதேச மாநிலம், லக்னோவில் மின்சார வாகன தொழிற்சாலையை தொடங்கி வைத்துப் பேசிய அவர், பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 2030ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கூறினார்.*

*தொழில் தொடங்குவதை எளிதாக்க, மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் அமைச்சர் தெரிவித்தார்.*

>>>>>><<<<<<

*தூர்தர்ஷன் செய்தி அலைவரிசையில் ஒளிபரப்பாகும், பிரஸார் பாரதியின் படைப்பாளர்களுக்கான பிரத்யேக நிகழ்ச்சியை தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூட்டாக இன்று தொடங்கி வைத்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. அஸ்வினி வைஷ்ணவ், படைப்பாற்றல் பொருளாதாரத்தில் ஒரு கோடி இளைஞர்களை இணைப்பதற்கான இலக்கோடு, மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.*

*தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், தற்போதைய தேவைகளுக்கேற்ப நடப்பாண்டில் முற்றிலுமாக மறுசீரமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.*

*பிரஸார் பாரதியின் ஒலிபரப்பு நிறுவனங்களில், புதிய படைப்பாளர்கள், புதிய தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய தொழில்களில் கவனம் செலுத்துவதற்கு தூர்தர்ஷனின் புதிய நிகழ்ச்சி வழிவகுக்கும் என்று திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தியுள்ள தூர்தர்ஷனின் முயற்சியை பாராட்டுவதாக தெரிவித்தார்.*

நாட்டின் கலை மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் தொழில்களை விரிவுபடுத்துவதற்கு, இந்நிகழ்ச்சி பெரிதும் உதவிடும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

DD நியூஸ் அலைவரிசையில் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் இரவு 7 மணிக்கு படைப்பாளர்களுக்கான இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.

தேசிய அளவில் செய்தி, கலாச்சாரம், சுற்றுலா, சுகாதாரம், கல்வி, சுற்றுச் சூழல், பொழுதுபோக்கு உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த படைப்பாளிகள் 10 நிமிடங்கள் இந்நிகழ்ச்சி மூலம் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் பத்து லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூரில் மாநில அரசின் ''உங்க கனவ சொல்லுங்க'' திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது கிராமப்புற மற்றும் நகர்ப்புற கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டிருக்கும் என்றார்.

வேலைவாய்ப்பு, தொழில் உள்ளிட்ட ஏழு துறைகளில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகம் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

கல்விக்கு உயர் முன்னுரிமை அளித்து தமது அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் திமுக அரசு, கடந்த நான்காண்டுகளில் ஆக்கபூர்வமான திட்டங்கள் எதையும் செயல்படுத்தாமல், தற்போது உங்கள் கனவைச் சொல்லுங்கள் என்ற பெயரில் புதியதொரு திட்டத்தை தொடங்கியிருப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சீரான சட்டம் ஒழுங்கு, கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருள் புழக்கம் இல்லாத தமிழகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் போதுமான பாதுகாப்பு இல்லை என்றும், அரசு துறைகளில் ஊழல் மலிந்து கிடப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

*தூய்மைப்பணியாளர்கள், விவசாயிகள், அங்கன்வாடி ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் என அனைத்து தரப்பினரின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*கல்விக் கடன் தள்ளுபடி, சமையல் எரிவாயு விலைகுறைப்பு போன்ற பல்வேறு வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.*

*>>>>>><<<<<<*

*வன பாதுகாப்பு மற்றும் காலநிலை தாங்கு திறனை வலுப்படுத்தும் நோக்கில், தமிழகத்தில் 100 புதிய காப்பு வனங்கள் அறிவிக்கை செய்யப்பட்டதை ஆவணப்படுத்தும் சிறப்பு பதிப்பை மாநில வனத்துறை அமைச்சர் திரு ராஜகண்ணப்பன் சென்னையில் இன்று வெளியிட்டார்.*

*இந்த புதிய காப்பு வனங்கள் அறிவிக்கப்பட்டதன் காரணமாக, மதுரை, திண்டுக்கல், தேனி, நீலகிரி உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் பாதுகாக்கப்பட்ட வனங்களின் பரப்பளவு 135 சதுர கிலோமீட்டர் அளவுக்கு விரிவடைந்துள்ளதாக வனத்துறையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*பொங்கல் பண்டிகை மற்றும் சுபமுகூர்த்த தினங்கள் நெருங்கி வருவதை முன்னிட்டு, கன்னியாகுமரி மாவட்டம், தேவாளை மலர்ச் சந்தையில் பூக்களின் விலை அதிகரித்துள்ளது.*

*தமிழகம் மட்டுமின்றி கேரளா உள்ளிட்ட அண்டை மாநிலங்களிலிருந்து வரும் வியாபாரிகள் மலர்களை பெருமளவு வாங்கிச் செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - குமார் 50 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் யாழ்பாணம் - திரிகோண மலை இடையே நாளை கரையை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர், அடுத்த 24 மணிநேரத்தில் நாகை, திருவாரூர் மாவட்டங்களில் கனமுதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.*

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் (1) 40 Sec. )*

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் குமரிக்கடல் பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் அடுத்த இரண்டு நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் (2) 18 Sec. )*

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் பள்ளி மாணவிகள் பங்கேற்ற போக்குவரத்து வார விழா விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் பொங்கல் விழாவை முன்னிட்டு, தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

ராணிப்பேட்டை மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்தார், 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மானவ் தாக்கர், இன்று ஸ்வீடனின் Truls Moregard-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் மும்பையில் சற்றுமுன் தொடங்கியது.

இரவு மணி *7.30*-மணிக்கு நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் மும்பை – பெங்களூரு அணிகள் மோதுகின்றன.

*>>>>>>END<<<<<<<*